# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

எண்: பி1–8 /2024 நாள்: 25.11.2024

## சுற்றறிக்கை

| | |
|---|---|
| பொருள் | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் – சட்டத்துறை – 75–வது இந்திய அரசியலமைப்பு தினம் 26.11.2024 அன்று அனுசரிக்கப்படுதல் – இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையினை வாசிக்க ஏற்பாடு செய்தல் – தொடர்பாக |
| பார்வை | அரசு செயலாளர், சட்ட (அநமு–1)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித எண் 15168 / அநமு–1/2024, நாள் 23.11.2024. |

----

பார்வையில் காணும் அரசு செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 75வது இந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு, 26.11.2024 அன்று காலை 11.00 மணிக்கு பல்கலைக்கழக சீனிவாச சாஸ்த்திரி அரங்கின் முன்பு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையை வாசிக்க இருப்பதால் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையை வாசிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரை பின்பக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

பதிவாளர் (பொ)

பெறுதல்

அனைத்து புல முதல்வர்கள்
அனைத்து துறைத் தலைவர்கள்
தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி
இயக்குநர், தொலைதூரக் கல்வி இயக்ககம்
இயக்குநர், அண்ணாமலை புத்தமைப்பு மையம் (Annamalai Digital Information Centre)
அனைத்து இயக்குநர்கள்
அனைத்து அதிகாரிகள்
அனைத்து உதவிப் பதிவாளர்கள் / பிரிவு அலுவலர்கள் (Admini & Exam)
ஒருங்கிணைப்பாளர், நாட்டு நலப்பணித்திட்டம் (NSS)
ஒருங்கிணைப்பாளர், இளைஞர் செஞ்சிலுவை சங்கம் (YRC)
ஒருங்கிணைப்பாளர், தேசிய மாணவர் படை (AGRI)

**நகல்**

1) துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்
2) பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3) செயற்பொறியாளர் (மின் பணி அமைப்பு)
4) மக்கள் தொடர்பு அதிகாரி
5) பாதுகாப்பு அலுவலர்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை [1][இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்].

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, [2][நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு] இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையோராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.